4. அறிக்கைகள் அளித்தல்.

(அ). பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களை வாழ வைக்கும் இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருவடித் தாமரைகளைப் பணிந்து வணங்குகின்றேன்.

*1994–95*ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக கீழ்க்காணும் இரண்டு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருடைய *1984–85* மற்றும் *1985–86* ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு *(1992–93)* அளித்த எண்பத்தெட்டாவது அறிக்கையில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரை மீது அரசாங்கம் எடுத்திருக்கின்ற நடவடிக்கை பற்றிய இருநூற்று இருபத்தி மூன்றாவது அறிக்கை.

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருடைய *1982–83* மற்றும் *1983–84* ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு *(1992–93)* அளித்த நூற்று ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய இருநூற்றி இருபத்தி நான்காவது அறிக்கைகளைப் பேரவையின் முன் அளிக்கிறேன், வணக்கம்.

(ஆ) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.